வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 28.06.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

அரசியல் சாசனத்தின் முகப்புரையே, அதன் ஆன்மா என்றும், அது, மாற்றத்தக்கதல்ல என்றும் குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, உலகின் மிகத் தொண்மையான நாகரீகத்தை கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று குஜராத் மாநிலத்தில் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

இணைய வழி பண மோசடியில் ஈடுபட்ட பீகாரைச் சேர்ந்த கும்பலை, புதுச்சேரி சைபர் க்ரைம் போலீசார் கைது செய்துள்ளனர்.

--------------------------

ஜக்தீப் தன்கர் (16)

அரசியல் சாசனத்தின் முகப்புரையே, அதன் ஆன்மா என்றும், அது, மாற்றத்தக்கதல்ல என்றும் குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார். இந்திய அரசியல் சாசனத்தைத் தவிர, வேறு எந்த அரசியல் சாசனத்திலும் மாற்றங்கள் மேற்கொள்ளப் படவில்லை என்றும் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறு தெரிவித்த திரு. தன்கர், அரசியல் சாசனம் வளர்ந்தது முகப்புரையின் அடிப்படையில் என்றும், நாட்டின் அவசர நிலை காலகட்டத்தில், மக்கள் மனோ ரீதியாக அடிமைப்படுத்தப்பட்ட நேரத்தில், நமது அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டதாகவும் தெரிவித்தார். சமதர்ம, மதசார்பற்ற, நேர்மை

உள்ளிட்ட வார்த்தைகள், அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டது அவசர நிலை காலத்தின் ஆட்சியர்களின், துரோக மனோ நிலையை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்தார். விழாவின் போது, நிகழ்கால கருத்துக்கள், அண்ணல் அம்பேத்கரின் செய்திகளோடு ஒத்துப் போவதை குறிப்பிட்டு பேசிய திரு. ஜக்தீப் தன்கர், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், மக்கள் மனதில் என்றென்றும் வாழ்வதாக குறிப்பிட்டார்.

-------------------------

*பிரதமர் ஆச்சார்யா* 1 (15)

இந்தியா தமது நித்திய சிந்தனைகள், தத்துவம், மற்றும் ஞானம் மூலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலைத்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், ஆச்சார்யா வித்யானந்த் ஜி மகாராஜின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஓராண்டு கொண்டாட்டங்களை துவக்கி வைத்து பேசும் போது இவ்வாறு தெரிவித்த பிரதமர், இந்தியா, உலகின் மிகத் தொண்மையான நாகரீகத்தை கொண்டுள்ளதாக தெரிவித்தார். முனிவர்கள், மடாதிபதிகள், புனிதர்கள் மற்றும் குருமார்கள், நமது தேசத்தின் தொண்மையான தத்துவங்களை நமக்கு வழங்கியவர்கள் என்றும் கூறினார். தொண்மையான இந்திய பாரம்பரியத்தின் நவீன ஒளிவிளக்காக ஆச்சார்யா வித்யானந்த் திகழ்வதாகவும் பிரதமர் தெரிவித்தார். ஆச்சார்யா ஸ்ரீ வித்யானந்த், ஆன்மிகவாதியாக வாழ்ந்ததோடு மட்டும் அல்லாமல், ஆன்மிகத்தை, சமூகம் மற்றும் கலாச்சாரத்தை மறுகட்டமைக்கும் சக்தி வாய்ந்த மார்க்கமாகவும் மாற்றியவர் என்றும் கூறினார். நாடு, வளர்ச்சி மற்றும் பாரம்பரியம் ஆகிய இரண்டையும் தழுவி முன்னேற வேண்டும் என்று

*பிரதமர் ஆச்சார்யா* 2 (6)

கூறிய பிரதமர், மத்திய அரசு, தேசத்தின் கலாச்சாரத் தளங்கள் மற்றும் புனித யாத்திரை தலங்களை மேம்படுத்தி வருவதாக குறிப்பிட்டார். பிராகிருத மொழிகளுக்கு, செம்மொழி அங்கீகாரம் அளித்து வரும் மத்திய அரசு, இந்தியாவின் தொண்மை வாய்ந்த கையெழுத்துப் பிரதிகளை மின்னணு மயமாக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். விழா குறித்த கூடுதல் தகவல்கள்….

*பிரதமர் ஆச்சார்யா* 3 (15)

ஆச்சார்யா ஸ்ரீ வித்யானந்த் ஜி மகாராஜை கவுரவிக்கும் விதத்தில் அவரின் நூறாவது பிறந்த நாளை, பகவான் மகாவீர் அஹிம்சா பாரதி அறக்கட்டளையுடன் இணைந்து, ஓராண்டு காலம் கொண்டாட மத்திய அரசு, முடிவு செய்துள்ளது. இந்த ஓராண்டில், கலாச்சாரம், இலக்கியம், கல்வி, மற்றும், ஆன்மிக நிகழ்வுகளை நாடு முழுவதும் முன்னெடுக்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஓராண்டு கொண்டாட்டங்களின் துவக்க நாளான இன்று, ஆச்சார்யா ஸ்ரீ வித்யானந்த் ஜி மகாராஜ் நினைவு நாணயம் மற்றும் தபால் தலை புதுடெல்லியில் வெளியிடப்பட்டது. ஜைன மத போதனைகள் மற்றும் தத்துவங்கள் குறித்து, 50க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றி உள்ள ஆச்சார்யா ஸ்ரீ வித்யானந்த் ஜி, பெரிதும் மதிக்கப்பெற்ற ஜைன ஆன்மிக தலைவராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தவர். நாடெங்கிலும் உள்ள ஜைனர் கோவில்களை, அதன் தொண்மை மாறாமல் புனரமைத்ததில் முக்கிய பங்காற்றிய இவர், கல்வி, ஜைன சித்தாந்தம், செம்மொழிகள் உள்ளிட்டவைகளுக்காக பெரும் தொண்டாற்றியவர் ஆவார்.

*பிரதமர் ஆச்சார்யா* 4 (4)

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், ஆன்மிக சிந்தனைகள் முதல், உலகளாவிய புவிசார் அரசியல் கொந்தளிப்பு வரை, ஆச்சார்யா ஸ்ரீ வித்யானந்த் ஜி மகாராஜின் தத்துவங்கள் இன்றளவும் பொருத்தமாக உள்ளதாக தெரிவித்தார்.

---------------------------

*அமித் ஷா* (12)

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று குஜராத் மாநிலம் பஞ்ச் மஹால் மாவட்டத்தில் கோத்ரா பகுதியில் அமைந்துள்ள, ஸ்ரீ கோவிந்த் குரு பல்கலைக்கழகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள உயர் சிறப்பு மையத்தின் கட்டடத்தை மெய்நிகர் முறையில் திறந்து வைத்து, பல்கலைக்கழக வளாகத்தில் மேற்கொள்ளப்பட உள்ள

பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மியாவாக்கி நடவு முறையில், குறைந்த காலத்தில் உருவாக்கப் பட்டுள்ள அடர்ந்த உள்நாட்டு காடுகளை திறந்து வைத்த அவர், விளையாட்டு வளாகம் மற்றும் நீர்த்தேக்க கட்டமைப்புகளையும் திறந்து வைத்தார். மேலும் அகமதாபாத்தில், அதரோடா கிராமத்தில், மாதிரி கூட்டுறவு கிராமம் திட்டத்தின் கீழ், புதிதாக கட்டப்பட்டுள்ள கூட்டுறவு வளாகத்தையும், சானந்த் நகரின் ஜூவல் கிராமத்தில் கட்டப் பட்டுள்ள ஆரம்பப் பள்ளியையும் பின்னர் திறந்து வைக்க உள்ளார்.

--------------------------

மோசடி 1 (16)

பிரபல கட்டுமான நிறுவனங்களின் பெயரில், இணைய வழி மோசடியில் ஈடுபட்ட கும்பலை, புதுச்சேரி சைபர் க்ரைம் காவல் துறையினர் கைது செய்துள்ளனர். பிரபல இரும்பு நிறுவனங்களின் பெயரில் 10 சதவிகிதம் தள்ளுபடி விலையில், டிஎம்டி கம்பிகள் விற்கப்படுவதாக, முகநூலில் வந்த விளம்பரத்தை அடுத்து, புதுச்சேரி ரெட்டியார் பாளையத்தைச் சேர்ந்த ஒருவர், 31 லட்சம் ரூபாய் பணம் செலுத்தி உள்ளார். ஆனால், குறிப்பிட்ட காலத்திற்குள் இரும்பு கம்பிகள் வந்து சேராததால், விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டு இருந்த தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ள முயற்சித்துள்ளார். ஆனால், அந்த எண்ணை தொடர்பு கொள்ள முடியாததால், புதுச்சேரி சைபர் க்ரைம் காவல் துறையில் புகார் அளித்தார். நவீன தொழில்நுட்ப உதவியுடன் விசாரணை மேற்கொண்ட சைபர் க்ரைம் காவல் துறையினர், அது மோசடி நிறுவனம் என்பதையும், வங்கிக் கணக்கு எண் மூலம், பீகாரைச் சேர்ந்த மோசடி கும்பலுக்கு இதில் தொடர்புடையதையும் கண்டறிந்து, 5 பேரை கைது செய்துள்ளனர். அவர்களிடம் இருந்து, 34 லட்சம் ரூபாய் ரொக்கம், 40 செல்போன், லேப்டாப், டைரி உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

மோசடி 2 (15)

இணைய வழி குற்றங்கள் காவல் கண்காணிப்பாளர் திரு. எஸ் பாஸ்கரன், காவல் ஆய்வாளர்கள் திரு. எஸ் தியாகராஜன், திரு. கீர்த்தி ஆகியோர் மேற்கொண்ட விசாரணையில், 2019ஆம் ஆண்டு முதல்

இத்தகைய மோசடியில் ஈடுபட்டு வரும் இந்த கும்பல், இதுவரை பல கோடி ரூபாய் வரை மோசடி செய்திருக்கலாம் என்றும், கைப்பற்றப்பட்ட டைரியில் 4 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட தொலைபேசி எண்கள் உள்ளதாகவும், தெரிய வந்துள்ளது. சமூக வலைதளங்களில் வரும் செய்திகளை உறுதிப்படுத்தாமல் நம்ப வேண்டாம் எனவும், பணப்பரிவர்த்தனை, வங்கிக் கணக்கு போன்றவற்றில் சந்தேகம் இருந்தால், தொடர்புடைய வங்கிகளை அணுகி, சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளுமாறு சைபர் க்ரைம் காவல் துறை பொது மக்களை எச்சரித்துள்ளது. இந்த மோசடியில் ஈடுபட்ட கும்பலை கைது செய்த புதுச்சேரி சைபர் க்ரைம் காவல் துறையினரை டிஐஜி திரு. சத்திய சுந்தரம், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு. பிரவீன் குமார் திரிபாதி பாராட்டினர். பின்னர் டிஐஜி திரு. சத்திய சுந்தரம் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

--------------------------

*அஷ்வினி வைஷ்ணவ் (6)*

மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று, மேற்குவங்கத்தின் ஹவுரா மாவட்டத்திற்கு உட்பட்ட சந்த்ராகாச்சி ரயில் நிலையத்தில் இருந்து, புருளியா-பான்குரா-ஹவுரா வழித்தடத்தின் பயணிகள் ரயில் சேவையை மெய்நிகர் முறையில் துவக்கி வைத்தார். பின்னர், கொல்கத்தா தேசிய நூலகத்தில் நடைபெற உள்ள இலகு ரக தொழில்களின் தொழில் அதிபர்களின் மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

--------------------------

*பராக் ஜெயின் (4)*

ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவான “ரா” அமைப்பின் அடுத்த செயலராக, திரு. பராக் ஜெயினை மத்திய அரசு நியமித்துள்ளது. 1989ஆவது பிரிவின், பஞ்சாப் கேடரின் ஐபிஎஸ் அதிகாரியான திரு. பராக் ஜெயின், 2 ஆண்டுகளுக்கு இந்த பதவியில் இருப்பார்.

--------------------------

*புதுச்சேரி பிஜேபி (7)*

புதுச்சேரி பாரதீய ஜனதா கட்சியின் மாநில தலைவருக்கான தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனுக்கள், கட்சியின் புதுச்சேரி தலைமை அலுவலகத்தில் நாளை 29ஆம் தேதி காலை 10 மணி முதல், 12 மணி வரை, பெறப்படும் என்று, மாநில துணைத் தலைவரும், தேர்தல் அதிகாரியுமான திரு. அகிலன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும், வேட்பு மனுக்களை, நாளை பிற்பகல் 1 மணி முதல், 3 மணி வரை, திரும்பப் பெறலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

---

*வானிலை (6)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, அடுத்த 7 நாட்களுக்கு, தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுவை-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே, புதுச்சேரியில், இன்று மாலை கோரிமேடு, இந்திரா நகர் உள்ளிட்ட பகுதிகளில், லேசான மழை பெய்தது.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அரசியல் சாசனத்தின் முகப்புரையே, அதன் ஆன்மா என்றும், அது, மாற்றத்தக்கதல்ல என்றும் குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, உலகின் மிகத் தொண்மையான நாகரீகத்தை கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று குஜராத் மாநிலத்தில் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

இணைய வழி பண மோசடியில் ஈடுபட்ட பீகாரைச் சேர்ந்த கும்பலை, புதுச்சேரி சைபர் க்ரைம் போலீசார் கைது செய்துள்ளனர்.